# திருவேற்காடு நகராட்சி

## திருவள்ளூர் மாவட்டம்

# நிர்வாக அறிக்கை

# 2022–23

# திருவேற்காடு நகராட்சி

# நிர்வாக அறிக்கை
# 2022 - 2023

## அமைப்பும் நிர்வாகமும்

**ஆட்சி எல்லை:**

சமயக்குறவர் நால்வருள் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றதும் அகத்திய மாமுனிவருக்கு பாலம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் திருமண கோலக்காட்சி அளித்ததும், 63 நாயன்மார்களுள் ஒருவரான மூர்க்கநாயனார் அவதரித்ததும் ஆதிசக்தியே உருமாரி வந்து கருமாரியாய் எழுந்தருளி அருளாட்சி செய்து வரும் அறமோங்கும் திருவேற்காட்டில், திருவேற்காடு, சுந்தரசோழபுரம், வீரராகவபுரம், அயனம்பாக்கம், கோலடி, பெருமாளகரம், நூம்பல் ஆகிய 7 கிராம பஞ்சாயத்துகளை ஒன்றாக சேர்த்து அரசு ஆணை எண்.991/79, நாள்.27.06.1979ன் படி திருவேற்காடு பேரூராட்சி உருவாக்கப்பட்டது. இப்பேரூராட்சி அரசு ஆணை எண். 300, (நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை), நாள் 24.08.2004ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் இந்நகராட்சி அரசு ஆணை எண்.154, (நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9.08.2010ன் படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் இந்நகராட்சி அரசாணை எண்.49 (நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள்.15.04.2023—ன்படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

**மக்கள் தொகை:**

இந்நகராட்சி பகுதியில் அமைந்த 16301 குடியிருப்புகளில் **2011** ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 62289 இதில் **31437** பேர் ஆண்கள், **30852** பேர் பெண்கள் ஆவர். 2023—ம் ஆண்டில் குடியிருப்புகளின் எண்ணிக்கை 31554 ஆகவும் மக்கள் தொகை 116216 ஆகவும் உத்தேசமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>நகராட்சி அலுவலர்கள்:</u>

<u>ஆணையர்:</u>

அறிக்கையாண்டில் 01.04.2022 முதல் 31.03.2023 வரை திரு.H.இரமேஷ் B,L., அவர்கள் ஆணையராக பொறுப்பேற்று பணிபுரிந்துள்ளார்.

<u>பொறியாளர்:</u>

அறிக்கையாண்டில் 01.04.2022 முதல் 31.03.2023 வரை திரு.A.P.குமார் அவர்கள் திருவேற்காடு நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார்.

1.04.2022 முதல் கீழ்கண்டவாறு நகர் மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

| வ. எண் | வார்டு உறுப்பினர் பெயர் | வார்டின் விபரம் | கட்சியின் விபரம் |
|---|---|---|---|
| 1. | திரு. ஏ.கிருஷ்ணமூர்த்தி | நகர் மன்ற தலைவர் (ம) வார்டு எண்.8 | திமுக |
| 2. | திரு. ர.ஆனந்தி | நகர் மன்ற துணை தலைவர் (ம) வார்டு எண்.14 | காங்கிரஸ் |
| 3. | திருமதி. ரா.சாந்தி | வார்டு எண்: 1 | சுயேட்சை |
| 4. | செல்வி. ஆ. ஆஷா | வார்டு எண்: 02 | சுயேட்சை |
| 5. | திருமதி. கோ. கோமதி | வார்டு எண்: 03 | சுயேட்சை |
| 6. | திரு. பொ. சுதாகர் | வார்டு எண்: 04 | திமுக |
| 7. | திரு. ப. பிரதானம் | வார்டு எண்: 05 | திமுக |
| 8. | திருமதி. தெ. விஜயலட்சுமி | வார்டு எண்: 06 | திமுக |
| 9. | திருமதி.ப. ருக்மணி | வார்டு எண்: 07 | திமுக |
| 10. | திருமதி. ப. நர்மதாகுமாரி | வார்டு எண்: 09 | திமுக |
| 11. | திருமதி.கு. நளினி | வார்டு எண்: 10 | திமுக |
| 12. | திரு. தி.வி. இளங்கோவன் | வார்டு எண்: 11 | திமுக |
| 13. | திருமதி. ஜானகி சுடலைமணி | வார்டு எண்: 12 | சுயேட்சை |
| 14. | திருமதி. இ. காஞ்சனா | வார்டு எண்: 13 | சுயேட்சை |
| 15. | திரு. செ. சங்கர் | வார்டு எண்: 15 | திமுக |
| 16. | திருமதி. பி. ஆர்த்தி | வார்டு எண்: 16 | திமுக |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. பு. உமாபதி | வார்டு எண்: 17 | திமுக |
| 18. | திரு. ந. விக்னேஸ்வரன் | வார்டு எண்: 18 | சுயேட்சை |

| வ. எண் | குழுவின் விபரம் | கட்சியின் விபரம் |
|---|---|---|
| I | <u>நியமனக் குழு உறுப்பினர் விபரம்</u> | |
| | **திருமதி.ப. ருக்மணி**<br>7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| II | <u>ஒப்பந்தக்குழு உறுப்பினர்</u> | |
| | **திரு. செ. சங்கர்**<br>15வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| III | <u>வரி விதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர்கள்</u> | |
| | **1. திரு. ப. பிரதானம்,**<br>5வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| | **2. திருமதி.தெ.விஜயலட்சுமி,**<br>6வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| | **3. திருமதி.கு. நளினி,**<br>10 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| | **4. திரு.தி.வி.இளங்கோவன்,**<br>11 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |

<u>நிர்வாகம்</u>

திருவேற்காடு நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் 28.09.2020 முதல் கதவு எண்.1 சிவன் கோயில் தெரு, திருவேற்காடு, சென்னை–600077 முகவரில் செயல்பட்டு வருகிறது.

**2022 –2023–ம் அறிக்கையாண்டில் நகராட்சியில் கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் (Norms) அரசாணை எண்.10 (நபா) நாள்.23.01.2023–ன்படி கீழ்கண்ட பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.**

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் |
|---|---|---|
| 1. | நகராட்சி ஆணையர் (சிறப்பு நிலை) | 1 |
| 2. | மேலாளர் (வகுப்பு –1) | 1 |
| 3. | வருவாய் அலுவலர் (வகுப்பு –1எ) | 1 |
| 4. | உதவியாளர் (வகுப்பு – V) | 5 |
| 5. | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு – V) | 2 |
| 6. | இளநிலை உதவியாளர்கள் (வகுப்பு – VII) | 10 |
| 7. | சுருக்கெழுத்தர் | 1 |
| 8. | தட்டச்சர் | 4 |
| 9. | திட்ட அமைப்பாளர் | 1 |
| 10. | புள்ளிவிவரக் குறிப்பாளர் | 1 |
| 11. | பதிவறை எழுத்தர் | 1 |
| 12. | அலுவலக உதவியாளர் | 4 |
| 13. | வருவாய் உதவியாளர் | 12 |
| 14. | நகராட்சி பொறியாளர் (நிலை –1) | 1 |
| 15. | இளநிலை பொறியாளர் | 3 |
| 16. | பணி மேற்பார்வையாளர் | 3 |
| 17. | படவரைவாளர் (நிலை–3) | 1 |
| 18. | பணி ஆய்வர்கள் | 5 |
| 19. | மோட்டார் பம்பு இயக்குபவர் | 6 |
| 20. | மின்கம்பி கண்காணிப்பாளர் (நிலை–1) | 1 |
| 21. | குழாய் பொருத்துனர் (நிலை–1) | 1 |
| 22. | முதுநிலை நகரமைப்பு அலுவலர் | 1 |
| 23. | நகரமைப்பு ஆய்வாளர் | 3 |
| 24. | மருத்துவ நல அலுவலர் | 1 |
| 25. | துப்புரவு அலுவலர் | 1 |
| 26. | துப்புரவு ஆய்வர் | 6 |
| 27. | துப்புரவு மேற்பார்வையாளர் | 10 |
| 28. | ஓட்டுநர்கள் | 3 |
| 29. | துப்புரவு பணியாளர்கள் | 12 |
| 30. | களப் பணியாளர்கள் | 1 |

| | | |
|---|---|---|
| **31.** | சமுதாய அமைப்பாளர் (அயலிடைப்பணியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டனர்) | 1 |
| | **மாத்தம்** | **104** |

**கணினி மயமாக்கல் மற்றும் மின்னனு நிர்வாகம்**

இந்நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவை கணினியில் பதியப்பட்டுள்ளது. மேலும் பிறப்பு இறப்பு பதிவுகளும் கணினியில் பதியப்பட்டு பொதுமக்களுக்கு சான்றுகள் நேரிலும் / இணையதளம் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி அலுவலக வளாகத்தில் வரி வசூல் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு இடையூறு இன்றி சொத்துவரி, தொழில்வரி, இதர இனங்கள் ஆகிய கட்டளை செலுத்த https://tnurbanepay.tn.gov.in என்ற இணையதளம் வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மூலம் கைபேசி ஆப் (CMA-UTIS) வசதி அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், பொது மக்கள் செலுத்த வேண்டிய வரி இனங்களை இடையூயின்றி செலுத்தப்பட்டு வருகிறது.

**பொறியியல் பணிகள்**

நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் 2022–23ம் அறிக்கையாண்டில் கீழ்கண்ட திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| **1.** | **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–23**<br><br>அ) நகராட்சி பகுதியில் LPG தகன மையமாக மாற்றும் பணி, பூங்கா மற்றும் குளம் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | அரசு நிதி ரூ. 78.28<br>பொது நிதி ரூ. 5.00<br>**மொத்தம் ரூ. 83.28** |
| **2.** | **15வது நிதி குழு ஆணையரகத்தி மான்ய நிதி 2022–23**<br><br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள அடிப்படை வசதி பணியான சாலை பணிகள், திடக்கழிவு மேலாண்மை வாகனங்கள் கொள்முதல் செய்தல். | அரசு நிதி ரூ. 220.00<br>பொது நிதி ரூ. 0.00<br>**மொத்தம் ரூ. 220.00** |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 3. | **நமக்கு நாமே திட்டம் 2022–23**<br><br>அ) நகராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ளுதல். | அரசு நிதி ரூ. 45.33<br>Contribuction நிதி ரூ. 22.67<br>**மொத்தம் ரூ. 68.00** |
| 4. | **தூய்மை பாரத இயக்கம் 2022–23**<br><br>அ) நகராட்சி பகுதிகளில் சமுதாய கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல் | அரசு நிதி ரூ. 25.96<br>பொது நிதி ரூ. 12.57<br>**மொத்தம் ரூ. 38.53** |
| 5. | **மாநில நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022–23**<br><br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள பல்வேறு வகையான தெருமின் விளக்குகளை LED மின்விளக்குகளாக மாற்றுதல். | அரசு நிதி ரூ. 680.35<br>பொது நிதி ரூ. 0<br>**மொத்தம் ரூ. 680.35** |
| 6. | **தேசிய நகர்புற சுகாதார பணிக்கான நிதி 2022–23**<br><br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுதல். | அரசு நிதி ரூ. 120.00<br>பொது நிதி ரூ. 0<br>**மொத்தம் ரூ. 120.00** |
| 7 | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2022–23**<br><br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுதல். | அரசு நிதி ரூ. 74.00<br>பொது நிதி ரூ. 0<br>**மொத்தம் ரூ. 74.00** |

## பொது நிதி பணிகள்

| வ. எண் | பணிகளின் விவரம் | 2022 – 2023 | |
|---|---|---|---|
| | | எடுக்கப் பட்டவை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
| 1 | தார் சாலைகள் | 12 | 97.60 |
| 2 | சிமெண்ட் சாலைகள் | 9 | 71.70 |
| 3 | குடிநீர் பணிகள் | 20 | 141.90 |
| 4 | தெரு விளக்கு பணிகள் | 14 | 102.40 |
| 5 | மழைநீர் வடிகால்வாய் பணிகள் | 10 | 467.00 |
| 7 | இதர பணிகள் | 16 | 315.80 |
| | **மொத்தம்** | **81** | **1196.40** |

திருவேற்காடு நகராட்சிப் பகுதிகளில், மத்திய/மாநில அரசுகள் நகராட்சி நிர்வாகத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவிக்கப்படும் திட்டம் மற்றும் பணிகள் யாவும் மேற்படி அறிக்கையாண்டில் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பொது சுகாதாரம்

இந்நகராட்சியில் மருத்துவ நகர் நல அலுவலர் மற்றும் துப்புரவு ஆலுவலர் பணியிடம் காலியாக உள்ளதால், தற்போது உள்ள நிலையில் துப்புரவு ஆய்வாளர் மூலம் சுகாதார பிரிவினை பிரிவு அலுவலராக செயல்பட்டு வருகிறார். ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர், 12 நிரந்தர துப்புரவு பணியாளர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 192 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவேற்காடு நகராட்சி பகுதியில் சமுதாய கழிப்பிடங்கள் 7, (இருக்கைகள் – 48) பொது கழிப்பிடங்கள்–1 (இருக்கைகள்–12) நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் தனிநபர் இல்லக் கழிப்பறை மற்றும் தண்ணீர் வசதி உள்ளது. இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகள் மொத்த எடை38.35 மெட்ரிக் டன் ஆக உள்ளது. சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பைகளில் இயற்கையான முறையில் உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை தனியார் நிறுவனத்திற்கு மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.

பொதுமக்கள் அறியும் வண்ணம் சுகாதாரம் சம்மந்தமான தகவல்கள், தொடர்பு பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் பிறப்புகளும், இறப்புகளும் பதிவு செய்யப்பட்டது.

## கொள்ளை நோய் விவரங்கள்

அறிக்கை ஆண்டில் கொள்ளை நோய் தொடர்பான விவர அறிக்கை

| வ.எண். | நோயின் பெயர் | பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காலரா | இல்லை |
| 2 | அம்மை | |
| 3 | பிளேக் | |
| 4 | சீதபேதி | |
| 5 | வயிற்றுக் கடுப்பு | |
| 6 | சுவாசப்பை சம்மந்தமான நோய் | |
| 7 | இன்ஃப்ளுன்சா மற்றும் நாய்கடி | |
| 8 | கொரோனா வைரஸ் | |

துப்புரவு பணிகள்

பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்களால் நகரில் உள்ள குப்பைகள் தினசரி அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. இந்நகராட்சிப் பகுதியில், நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பறையில் நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலும் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் 2 டிப்பர் லாரி 8 சிறிய இலகு ரக வாகனங்கள் மற்றும் 23 பேட்டரி வாகனங்கள் துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டது. வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள வார்டுகளை தனியார் மூலமும் மற்றும் நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டும் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருவேற்காடு நகராட்சியில் வீடு வீடாகச் சென்று சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள், 7 பசுமை உரக்குடில்கள் (Micro compost Centre), 10 பூங்கா உரக்குடில்கள் அமைக்கப்பட்டு அங்கு, இயற்கை முறையில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மக்காத குப்பைகள் தனியார் நிறுவனத்திடம் மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.

உணவு கலப்பட தடுப்பு சட்டம்

2022–2023ம் ஆண்டு, உணவு பாதுகாப்பு சட்டம் அமுலில் உள்ளதால் மேற்படி பணிகள், உணவு பாதுகாப்பு துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வருவாய் பிரிவு வருவாயினம்

2022–2023 நிதியாண்டில், சொத்துவரி, காலிமனை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலிக்கப்பட்ட விவரம் கீழ்கண்டுள்ளவாறு உள்ளது.

**சொத்து வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| **1677.35** | **1430.65** | **246.69** |

சொத்து வரி விதிப்புகள் 2021 – 22-ல் 25995 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2022–2023ல் 26575 என வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**காலிமனை வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 232.87 | 158.93 | 73.93 |

காலிமனை வரி விதிப்புகள் 2021 – 22-ல் 4827 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2022–2023ல் 5561 என வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 266.80 | 257.55 | 9.25 |

தொழில் வரி விதிப்புகள் 2021 – 22-ல் 748 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2022–2023ல் 1313 என வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**வரியில்லா இனங்கள்:**

இந்நகராட்சிக்கு வரியில்லா இனங்களில் இரண்டு ஆண்டு குத்தகை இனங்கள் மட்டுமே இருந்தது. இதில் குத்தகை இனங்களான வாகன நுழைவு கட்டணங்கள் வசூலிக்கும் குத்தகை உரிமம் பொது மக்களின் பயன்பாட்டிற்காக நகர மன்ற தீர்மானத்தின் அனுதியுடன் இலவசமாக வாகனங்கள் சென்று வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு குத்தகை இனமான கட்டண கழிப்பிடத்தில் வசூல் செய்யும் உரிமத்திற்கான ஏலம் 5 முறை விடப்பட்டும ஏலம் எடுக்க முன்வராததால் நகராட்சி மூலம் சுங்க வசூல் செய்யப்பட்டு வருகிறது.

<u>நகரமைப்பு</u>

இந்நகராட்சியில் முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மூன்று நகரமைப்பு ஆய்வர் பணியிடத்தில் ஒரு நகரமைப்பு ஆய்வாளர் மட்டும் பணிபுரிந்து

வருகிறார். மேலும், நகர்மன்ற தீர்மானம் எண்.36 நாள் 26.06.2016ன் படி 01.08.2016 முதல் கட்டிட உரிமையாணை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டுமானங்கள் முறையாக கட்டிட அங்கீகாரம் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானங்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு அங்கீகாரம் பெற ஆவன செய்யப்படுகிறது. அங்கீகாரம் பெறாமல் கட்டிடம் கட்டுபவர்கள் மீது சட்ட ரீதியாக நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அறிக்கையாண்டில் 259 எண்ணிக்கை கட்டிட விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிக்கையாண்டில் வரன்முறைபடுத்து திட்டத்தின் கீழ் 82 கட்டிட மனை விண்ணப்பம் பெறப்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (NULM)

இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட சமுதாய அமைப்பாளர் பணியிடம் ஒன்று, மேற்படிபணியாளரை அயலிடைப் பணியாக NULM திட்டப் பணிகளை கவனிக்க தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. திருவேற்காடு நகராட்சியில் சுவர்ண ஜெயந்தி திட்டம் முடிவடைந்து புதிய திட்டமாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் (Tamil Nadu Urban Livability Mission) அறிக்கையாண்டில் செயலாக்கத்திற்கு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுவதற்கு வறுமைக் கோடு பட்டியல் சூராய்வு செய்து சரிபார்க்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தினை மேன்மைப்படுத்தும் பொருட்டு USHA Slum Survey – குடிசைப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் பற்றிய கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பில் பெண்களை குடும்பத் தலைவராக கொண்ட குடும்பங்களை கண்டறியப்பட்டது. (விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், திருமணம் ஆகாத

பெண்கள், விவாகரத்தானவர்கள், நோய் மற்றும் உடல் ஊனத்தால் பாதிக்கப்பட்ட ஆண்களின் வருமானம் ஈட்டம் முடியாத குடும்பத்தில் உள்ள பெண்கள்) மேற்படி பயணாளிகளுக்கு அரசின் பல்வேறு திட்டம் மூலம் பயன் அடையும் பொருட்டு இக்கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது.

புதியதாக துவங்கப்பட்டுள்ள தமிழ்நாடு வாழ்வாதார திட்டம் (TNLUM) –த்தில் கீழ்க்காணும் வகைப்பாடுகள் மூலம் செயல்பட்டு வருகிறது.

1) சமுதாய மேம்பாட்டுத் திட்டம் (Social Mobilization & Institution Development)
2) திறன் வளர் பயிற்சி (Capacity Building)
3) திறன் மேம்பாட்டு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பு (Employment through Skilled and Training)
4) தனிநபர் தொழிற் வளர்ச்சி திட்டம் (Self Employment Programme)
5) வீடற்ற மக்களுக்கு உணவிடம் (Shelter for Urban Homeless) (இந்நகராட்சியில் இத்திட்டம் இல்லை)
6) சாலையோர வியாபாரிகளுக்கு வளர்ச்சித் திட்டம் (Support to Urban Street Vendors) இவ்வகைப்பாடுகள் மூலம் இத்திட்டம் நகர்ப்புறத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைதரம் மேம்படுத்திட, சாலையோர வியாபாரிகள் பற்றிய கணக்கெடுப்பு முடிக்கப்பட்டது. பயணாளிகளுக்கு இந்நகராட்சியின் நகரமைப்பு பிரிவின் மூலம் அடையாள அட்டை வழங்கப்பட்டது. சம்ரூதின் திட்டத்தின் கீழ் PM Suraksha Bima Yojana, PM JanDhan Yojana, NFSA portb.benfit-One Nation One Ration Card மூலமாக Portal Update செய்யப்படுகிறது.
7) மக்களை தேடி மருத்துவம் மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டம் தன்னார்வலர்கள் மூலம் (CRP) மூலமாக இத்திட்டம் சுகாதாரத் துறையின் மூலமாக செயல்ப்படுத்தப்பட்டு வருகிறது.

K. Sabu... 8/6/23

ஆணையர்
திருவேற்காடு நகராட்சி.

08/6/2023